உ

ஓம் தத்ஸத்

பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீசேஷாத்திரி சிவனார்

அருளிச் செய்த

# இராகத் துவேஷப் பிரகரணம்
# சாதன சதுஷ்டயப் பிரகரணம்



இவைகளுடன்

இயமாதி அஷ்டாங்கங்களும்

சேர்க்கப் பட்டிருக்கின்றன.

கோவிலூர் மடாலயம்

1934.

11
721
R6
N34.
149003

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 7 | 15 | காலத்திரயனு | காலத்திரயத்தினு |
| 8 | 24 | முமூக்ஷ | முமூக்ஷு |
| 9 | 7 | வீரிஷைஞ | வீரிஷையிஞ |
| 14 | 1 | சாதனசதுஷ்டய | இராகத்துவேஷ |
| 15 | 16 | பொருள் | பொருள் |
| 19 | 10 | அசாத்திய | சாத்திய |
| 21 | 18 | ஷெ | ஷெ |
| ,, | 25 | சாதகையும் | சாத்கையும் |
| 22 | 7 | உபாதி | உபாதி |
| 23 | 15 | அக்கன்மாவது | அக்கன்மமாவது |
| ,, | 16 | நகரகப் | நரகப் |
| ,, | 23 | களையுளையுஞ் | களையுஞ் |
| 24 | 20 | மிருந்துந | மிருந்துந் |
| 30 | 18 | மூக்ஷு | முமூக்ஷு |
| 32 | 21 | கிரம் | சிரம் |
| ,, | 29 | மூன்றிறகும் | மூன்றிற்கும் |

PRINTED BY
CHETTINADU PRESS, KARIAKUDI.
1934.

உ

ஓம் தத்ஸத்.

பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார்

அருளிச்செய்த

# இராகத் துவேஷப் பிரகரணம்.

# சாதன சதுஷ்டயப் பிரகரணம்.

--- o ---

இது

ஸ்ரீ சமிவனக்ஷேத்திர மென்னுங் கோவிலூர்

ஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிக ரவர்களின்

ஆதீனத்தி லெழுந்தருளி யிருக்கும்

## ஸ்ரீ மகாதேவ ஞானதேசிக

## சுவாமிகள்

அநுமதியின் பேரில்,

காரைக்குடி

"செட்டிநாடு" அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

ஸ்ரீமுக வருஷம்.

1934.

OFFICE OF THE REGISTRAR ...
4 AUG 1934
MADRAS



உ

ஓம் தத்ஸத்

பரப் பிரஹ்மணே நம:

# குரு ஸ்துதிகள்.

## ஸ்ரீ தெக்ஷிணா மூர்த்தி.

சத்திய ஞான வனந்தவா னந்த தத்துவ மாய்நிறை யுருவே, சுத்தியா முளத்தை யடைந்தநால் வர்க்குச் சுகமதை யருள் பர குருவே, யத்திபோ லுருகு மடியரி னுளத்தோ டாலினு மமர்சுக தருவே, புத்தியில் லவனுய்ப் புலம்பியே திரியும் புலை யனைக் கடைக்கணலருளே (1)

### ஸ்ரீ வியாஸ பகவான்.

வேத நான்கினுட் பொருளினை மறைத்தவெந் தமக்குப்
போத பானுவாய்ப் புனிதநல் லருளுருப் புனைந்து,
சேது வாம்பர சுகத்தினைத் திகழ்தர விளக்கும்,
வாத ராயணன் மலரடி முடிமிசை வைப்பாம். (2)

### ஸ்ரீ சங்கரபூஜ்ய பகவத் பாதாசாரிய சுவாமிகள்.

பொங்கராப் பிறைமுக் கண்ணும் புனிதமா மகிமை தங்குங்,
கங்கைநீ ரதுவும் வேய்ந்த கடவுளே கருணை கூர்ந்து,
இங்குளா ரெவரு முய்ய விறைவனையவத ரித்த,
சங்கரா சார்ய னற்று டலைமிசை யணிகின் றேனே. (3)

### ஸ்ரீ உகந்த ஞாந தேசிகர்.

சகந்தனிலே பிறந்திறந்து வீணைநாட் கழித்துத் தவித்த வென்ற, னகந்தனிலே யிருக்கின்ற பாவடிவை யானறிய வன்பு வைத்துச் சுகந்தனிலே மேலானசுகம் பரமசுக மென்றே தோன்றக் காட்டு, முகந்தகுரு தேசிகனை யநுதிநமு மிருதயத் திலுட்கொள் வேனே. (4)

## கோவிலூர் திரிமூர்த்திகள் துதி.

முடிமறை யறையு மெமைமெமக் கருளு முத்திரா மேசதே
சிகனைத், துடியிடை யுடையர் துரும்பென வருளுந் துகளறு
துறவிறை யவனைச், சடையிறை யடியின் மனமுற வருளுந்
சத்தறி வம்பரா ரியனைத், திடமுடன் மனத்திற் சிந்தைசந்
ததமுந் திகழ்தரப் புரிந்தி ருளிரிப்பாம். (5)

### ஸ்ரீ வீரசேகர ஞாந தேசிகர்.

பார மாகிய பவக்கடற் புணையெனப் பணிவார்க்,
கிர மார்பனி யிருவினைக் கிரவியா பெவர்க்குந்,
தூர மாமெனு முத்தியின் சொரூபமு மாகும்,
வீர சேகரன் விரைமலர்ப் பாதமென் வீடே. (6)

### ஸ்ரீ மஹாதேவ ஞாந தேசிகர்.

கரும்பாயி னிக்கின்ற மானுர்க ளின்பங்க டுவெனவே,
விரும்பாதி ருக்கவு நாள்வரு மோவிழை யாசை யெல்லாந்
துரும்பாக நீத்துவி டுத்தோரு ளக்கஞ்சத் துள்ளி ருக்குஞ்,
சுரும்பே கழநிப் பதிக்குரு மாதேவ தூயவனே. (7)

ஆதரத்துட னநுதிநம்பணி யன்பரோடுறை சாந்தனும்,
காதலற்றவர் காதுதொல்வினை கழியநோக்கிடு போதனும்,
மாதவத்தினர் மாண்பினுளுரு மறையவந்தமா தேவனைச்
சிதமுத்திசு கத்தினைப்பெற சிந்தையிற்றின மேத்துவாம். (8)

கண்ணுதலுஞ் செஞ்சடையுங் கறைமிடறுந் தான்கரந்து
கயிலைநீங்கி, எண்ணரிய கருணைமகா தேவனெனு மொருநாம
மெங்குமோங்க, மண்ணுலகி லடியார்க்கு முத்திநிலை பிரமமென
வகுக்கவந்த, வண்ணமளிக்குங் கழனிநகர் தனில்வாழ் குரு
பரனை வணங்கிவாழ்வாம். (9)

## குரு ஸ்துதிகள் முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

ஓம் தத்ஸத்
பரப்பிரஹ்மணே நம:

# முதலாவது

# இராகத் துவேஷப் பிரகரணம்.

குருஸ்துதி

ப்ரஹ்மாநந்தம் பரமஸுகதம் கேவலம் ஜ்ஞானமூர்த்திம்
விஸ்வாதீதம் ககநஸத்ருஸம் தத்வமஸ்யாதி லக்ஷயம்
ஏகம்நித்யம் விமலமசலம் ஸர்வதாஸாக்ஷி பூதம்
பாவாதீதம் த்ரிகுணரஹிதம் ஸத்குரும்தம் நமாமி. (1)

(இதனது பொருள்.)

பிரஹ்மானந்த ஸ்வரூபமாகியும், சிரேஷ்டமான சுகத்தைக் கொடுப்பதாகியும், நிர்விகாரமாகியும், ஞானவடிவமாகியும், பிரபஞ்சாதீதமாகியும், ஆகாசத்துக்குச்சமானமாகியும், மஹாவாக்கியங்களுக்கு இலட்சியார்த்தமாகியும், ஒன்றாகியும், நித்தியமாகியும், நின்மலமாகியும், அசைவற்றதாகியும், எப்போதுஞ் சாட்சிமாத்திரமாகியும், பாவனைகளுக் கப்பாற்பட்டதாகியும், முக்குணங்களு மில்லாததாகியுமிருக்கின்ற சற்குருவை நமஸ்காரம் பண்ணுகின்றேன்.

(இதுவுமது)

மூகாம்பிகாகடாக்ஷாந் மோஹவிஹீநம் கரோதிஸிஷ்யம்ய:
ஏகாத்மகம்ஸேஷகிரீஸ மஸேஷவேதாந்த தேசிகம்வந்தே (2)

(இதனது பொருள்)

மூகாம்பாளது கடாக்ஷத்தினாலே சீடனை மோகத்தினின்றும் விடுவித்தவராகியும், ஏகஸ்வரூபராகியும், சமஸ்தமான உபநிடதங்களுக் காசிரியராகியு மிருக்கின்ற சேஷகிரீசரென்னு நாமதேயத்தையுடைய ஆசாரியரை நமஸ்காரம் பண்ணுகின்றேன்.

---

(சுலோகம்)

காமாத்யா: ஷோடஸகுண ஹேயோபா தேயதாம்கதா:
தேஷாம்ஸ்வரூபம் ப்ரதமம் தாவத்தத்ர நிரூப்யதே. (3)

(இதனது பொருள்)

காமமுதற் பதினாறு குணங்களில் இராகமுதற் பதின்மூன்றுந் தள்ளத்தக்கனவும், இச்சைமுதன் மூன்றுங் கொள்ளத்தக்கனவுமாம். அவைகளின் ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகின்றது. இராகத்தி னம்சமே காமமாதலாற் காமாதியெனக் கூறினார். இப்பதின்மூன்றும் இராகத்துவேஷங்களின் பரியாயமெனக் கொள்க.

எந்த இராகத்துவேஷங்களினாற் றிரிவித கரணங்களுந் திரிவிதகன்மங்களைச் செய்கின்றதோ, அந்த இராகத்துவேஷங்களின் குணங்களை நிரூபிக்கிறோம். அவையாவன:—இராகம், துவேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மச்சரம், ஈரிஷை, அசூயை, இடம்பம், தர்ப்பம், அகங்காரமெனப் பதின்மூன்றும். இப்பதின்மூன்றும் மோக்ஷமடைவதற்கு விக்கினமாயிருக்கின்றபடியா லிவற்றை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலும் பரிசியாமற் சர்வாத்மனா விட்டுவிட வேண்டியது சித்தம். இவைகளின் விபரம் வருமாறு:—

## க. இராகம்.

பரஸ்திரீகமனம் பண்ணவேண்டுமென்று விகற்பித்துவருகிறசித்தவிருத்திக்கு இராகமென்று பெயர். இதை முமூக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனா விட்டுவிட வேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் இராவணனானவன் பரதாரமான சீதையம்மனை யிச்சித்த இராகத்தினாலவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களிலபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்களனுபவித்ததும், இன்னுஞ் சகோதரரான சுந்தோபசுந்தாளிருவருந் திலோத்தமையைக் கண்டு உன்பாரி என்பாரியென்றடித்துக்கொண்டிறந்ததும், இன்னுமநேகம் பேரிந்த இராகத்தினாற்றுக்க மனுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோமான படியினாலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த இராகத்தினாலநேக துக்க மனுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலுமிந்த இராகமிருந்தாற்றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்த இராகத்தை முமூக்ஷுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

## 2. துவேஷம்.

இப்படியே தனக்கொருவ னபகாரம் பண்ணினா லவனுக்குப் பதிலபகாரம் பண்ணவேண்டுமென்று விகற்பித்துவருகிறசித்தவிருத்திக்குத் துவேஷமென்று பெயர். இதை முமூக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் இரணியகசிபனானவன் தன்றமையனைக் கொன்ற நாராயணனைக் கொ

ல்லவேண்டுமென்ற துவேஷத்தினு லவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்கள நுபவித்ததும், இன்னுமநேகம் பேரிந்தத் துவேஷத்தினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங் களிற் கண்டிருக்கிறே மானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்தத் துவேஷத்தினு லநேக துக்க மநுபவிக்கின்ற தைப் பிரத்தியக்ஷமாகக்கண்டிருக்கிறபடியினுலும், இனிப்பிறக் கப்போகிற பேர்களிடத்திலு மிந்தத் துவேஷமிருந்தாற் றுக்க மே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இந்தத் துவேஷத்தை முமுக்ஷு வானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

### 3. காமம்.

இப்படியே புத்திர மித்திர களத்திர கிரகக் கிராம க்ஷேத் திர தனதான்யாதிகண் மேன்மேலுஞ் சம்பாதிக்க வேண்டு மென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குக் காமமென்று பெயர். இதை முமுக்ஷு வானவர்கள் காலத்திரயத்திலு மில் லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

என் விடவேண்டியதென்றுல், பூருவத்தில் நரகாசுரனு னவன் இலட்சம் ஸ்திரீகளைக் கலியாணஞ் செய்வதற் காசித் துத் தேவஸ்திரீகள் பதினுயிரம் பேர்களைச் சிறைபிடித்து வந்த தைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாலவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்ததும், இன்னு மநே கம் பேரிந்தக் காமத்தினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்க ளிற் கண்டிருக்கிறே மானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களுமிந்தக் காமத்தினுலநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப்

போகிற பேர்களிடத்திலு மிந்தக் காமமிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்தக் காமத்தை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

## 4. குரோதம்.

இப்படியே தனக்கு வேண்டிய காரியங்களி லொருவன் விக்கினம் பண்ணின லவனிடத்தி லாக்கிரகமாக விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்குக் குரோதமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

என் விடவேண்டியதென்றால், பூருவத்தில் பகாசுரனென்பவன் றனது புசிப்பிற்கு விக்கினஞ்செய்த வீமராஜன்பேரிற் குரோதம் வைத்ததனாலவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்ததும், இன்னு மநேகம் பேரிந்தக் குரோதத்தினற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்தக் குரோதத்தினலநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்தக் குரோதமிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்தக் குரோதத்தை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனுவிட்டு விட வேண்டியது சித்தம்.

## 5. உலோபம்.

இப்படியேதான் சம்பாதித்த பதார்த்தங்களி லொருத்தருக்கு மொருகாசளவுஞ் செலவுபண்ணலாகாதென்று விகற்பித்து

வருகிற சித்தவிருத்திக்கு உலோபமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் துரியோதனனானவன் சூதாடிக் கெலித்த பாண்டவர்களுடைய இராஜ்ஜியத்தி லிவர்கள் வசிக்கக்கூட விடங்கொடுக்க மாட்டேனென்ற உலோபத்தினாலவன் பிராணஹானி, பந்துநாசம் இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான அநேக வனர்த்தங்க ளநுபவித்ததும், இன்னு மநேகம் பேரிந்த உலோபத்தினாற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினாலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த உலோபத்தினாலநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த உலோப மிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்த உலோபத்தை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

## 6. மோகம்.

இப்படியே தான் சம்பாதித்த பதார்த்தத்தின் பேரிற் பிரியமோதப் பிரமோதமாய் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மோகமென்றுபெயர். இதைமுமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் தசரதமஹாராஜனானவன் தனது ஜேஷ்ட புத்திரனான ஸ்ரீராமன் பேரில் வைத்த மோகத்தினா லவர் மாதுருவாக்கிய பரிபாலன நிமித்தங் காட்டுக்குப் போகவதனாலவன் பிராணஹாணி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவைமுத

லான அநேக வநர்த்தங்க ளநுபவித்ததும், இன்னுமநேகம் பேரிந்த மோகத்தினாற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த மோகத்தினாலநேக துக்கமநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த மோக மிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்த மோகத்தை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

## 7. மதம்.

இப்படியே ஐஸ்வரிய பாகுள்யத்தினாற் கொர்வித்துக் கிருத்தியாகிருத்தியந் தெரியாமல் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மதமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்து மில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் கார்த்தவீரியார்ச்சுனனானவன் றன்னிடத்தில் வந்த மகரிஷியான நாரதரை மதித்துபசாரம் பண்ணாமற் கொர்வித்திருந்ததைக் கேட்ட பரசுராமனாலவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜிய ஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்களநுபவித்ததும், இன்னு மநேகம் பேரிந்த மதத்தினாற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த மதத்தினாலநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப்பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த மதமிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்த மதத்தை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

## 8. மச்சரம்.

இப்படியே ஒருத்தர் சுகமாயிருந்தா லவர்களைப் பார்த்துச் சகிக்காமல் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மச்சரமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

என் விடவேண்டியதென்றால், பூருவத்தில் சிசுபாலனனவன் தருமராஜன் இராஜசூயயாகத்தி லக்கிர தாம்பூலம் வாங்கத் தக்கவராரென்று விசாரித்து ஸ்ரீகிருஷ்ணசுவாமிக்குக் கொடுத்ததைச் சகிக்காமல் மச்சரப்பட்டதினு லவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்ததும், இன்னுமநேகம் பேரிந்த மச்சரத்தினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களுமிந்த மச்சரத்தினு லநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த மச்சரமிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இந்த மச்சரத்தை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

## 9. ஈரிஷை.

இப்படியே தனக்குவந்த துக்கம் பிறத்தியாருக்கு வரலாகாதா வென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு ஈரிஷையென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

என் விடவேண்டியதென்றால், பூருவத்தில் அருணஜக்ஷிதனனவன் தனக்கு வந்த துக்கந் தனதிஷ்டனை வாஞ்சுர

னுக்கு வரலாகாதாவென் றெதிர்த்த வீரிஷையினு லவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்த தும், இன்னுமநேகம் பேரிந்த வீரிஷையினுற் றுக்க மநுபவித் ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த வீரிஷைனு லநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியி னுலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த வீரிஷையிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோ ற்றுகிறபடியினுலும், இந்த வீரிஷையை முமுக்ஷுவான வர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

## 10. அசூயை.

இப்படியே தனக்குவந்த சுகம் பாருக்கு வரலாமா வென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு அசூயை யென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத் திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

என் விடவேண்டியதென்றுல், பூருவத்தில் பௌ ண்டரீக வாசுதேவனனவன் தனக்கும் வாசுதேவன், கிருஷ் ணனுக்கும் வாசுதேவனென்று பெயராவென்கிற வசூயை யினு லவனேடெதிர்த்து அவன் பிராணஹானி, பந்துநா சம், இராஜ்ஜியஹானி, இகபரங்களிலபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்ததும் இன்னு மநேகம் பேரிந்த வசூயையினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டி ருக்கிறோ மானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த வசூயையினு லநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷ மாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த வசூயையிருந்தாற் றுக்கமே யநுபவிப்

பார்களென்று தோற்றுகிறபடியினலும், இந்த வரூயையை முமூக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

## 11. இடம்பம்.

இப்படியே தான் பண்ணின தருமத்தை நாலுபேரும் பார்த்து பளா நன்ருயிருக்கின்றதென்று சொல்லவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு இடம்பமென்று பெயர். இதை முமூக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

என் விடவேண்டியதென்ருல், பூருவத்தில் நபூருவமஹாராஜனனவன் துருவாசமஹரிஷியைப் பார்த்து நான் செய்த யாகங்களைப்போல யார்செய்யப்போகிருர்கள், இது நன்ருயிருக்கின்றதாவென்று கேட்க, யானைத் துதிக்கைபோல ஆயிரம் வருஷம் நெய்சொரிந்து யாகஞ் செய்தவனு மிப்படிக் கேட்க வில்லை, ஈதென்ன இடம்பயாக மென்று சொன்னவரைக்கோபித்த அவனது யாகத்தோடுமவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்களநுபவித்ததும், இன்னுமநேகம் பேரிந்த இடம்பத்தினுற்றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினலும், இப்போதிருக்கிற பேர்களுமிந்த இடம்பத்தினலநேக துக்கமநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த இடம்பமிருந்தாற் றுக்கமே அநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினலும் இந்த இடம்பத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மானு விட்டுவிடவேண்டியது சித்தம்.

## 12. தர்ப்பம்.

இப்படியே புத்திர மித்திர களத்திர தனதானியாதி சம்பத்துத் தனக்கே யுண்டு, தனக்கொருத்தருஞ் சமானமில்லையென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குத் தர்ப்பமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

என் விடவேண்டியதென்ருல், பூருவத்தில் சதகண்டராவணனைவன் ஐஸ்வரியத்திற்றனக்கொருத்தருஞ் சமானமில்லையென்று அமரர்களுக்கு உபத்திரவஞ் செய்து வந்ததை நாரதரிராமருக்கறிவிக்க, அவர் பாரியான சீதையம்மனுலவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களிலபகீர்த்தி யிவை முதலான அநேகவநர்த்தங்க ளநுபவித்ததும், இன்னு மநேகம் பேரிந்தத் தர்ப்பத்தினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்தத் தர்ப்பத்தினுலநேக துக்க மநுபவிக்கிறதைப் பிரத்தியக்ஷமாகக்கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்தத் தர்ப்பமிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இந்தத் தர்ப்பத்தை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

## 13. அகங்காரம்.

இப்படியே அடா என்னை யறியாயா! நான் பிடித்த காரியம் விடுவேனு! நீயாவெனக்குப் புத்தி சொல்கிறவனென்று விகற்பித்துவருகிற சித்த விருத்திக்கு அகங்காரமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

என் விடவேண்டியதென்றால், பூருவத்தில் மதுகைடவ ரென்பவர்கள் மகாவிஷ்ணுவோடு பதினாயிரம் வருஷம் யுத்தஞ் செய்திளையாமலவர் வரங்களுக் காசியாமற் றாங்களந்தவிஷ்ணுவுக்கு வரங்கொடுத்த அகங்காரத்தினால் அவர்கள் பிராணஹானி, பந்துநாசம் இராஜ்ஜியஹானி இகபரங்களி லபகீர்த்தியிவை முதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்ததும், இன்னுமநேகம் பேரிந்த அகங்காரத்தினாற் றுக்கமநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினாலும், இப்போதிருக்கிற பேர்களுமிந்தஅகங்காரத்தினாலநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலுமிந்த அகங்காரமிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்த அகங்காரத்தைமுமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இந்த இராகமுதல் அகங்கார மீறான பதின்மூன்று குணங்களினா லிராவணன்முதல் மதுகைடவர்க ளீறானபேர்கள் மஹாசமர்த்தர்களாயிருந்து மவர்கள் பிராணஹானி முதலான அநேக வநர்த்தங்கள் முன்னநுபவித்ததைச் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினாலும், இப்படியே சத்திய வர்த்தமான காலத்திலுமிந்த இராகாதிகுணங்களா லநேக ஜனங்கள் பிராணஹானிகளும், அநேக ரோகங்களும், அநேக திரவிய நாசங்களும், பந்துக்கள் விரோதங்களும், அபகீர்த்திகளும் இவைமுதலான அநேகவநர்த்தங்க ளநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறோமானபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களு மிந்த இராகாதி குணங்களினின்றும் விடுபடாமற் போவார்களாகி லிப்படியே யநேக வநர்த்தங்க ளநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும், இந்த இராகாதி பதின்மூன்று குணங்களு மோக்ஷ

மார்க்கத்துக்குச் சத்துருவாயிருக்கிறபடியினாலும், ஜநநமர ணப் பிரவாகரூபமான நரகத்துக் கேதுவாயிருக்கிறபடியி னாலும், இப்பதின்மூன்று குணங்களையும் முமுக்ஷுவான வர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இவைகளாலுண்டான ஜநநமரணமே நரகமென்பதாம் இதிற்சமுசயமில்லை. ஜநநமரணரூபமான தேகமே நரகமென் பதற்குப் பிரமாணம்:—எங்கே சரீரமுண்டோ, அங்கேயெல் லாந் துக்கமுண்டு, எங்கே சரீரமில்லையோ அங்கேயெல்லாந் துக்கமில்லையென்று வேதத்திற் சொல்லியிருக்கிறபடியினா லிந் தச் சரீரமே சகல துக்கங்களுக்குஞ் சகல வநர்த்தங்களுக்கு மேதுவாக விருப்பதினாலிந்தச் சரீரமே நரகமென்று சொன் னது சித்தம். ஆதலாலிந்தச் சரீரத்துக்கேதுவான விப்பதின் மூன்று குணங்களையுமுமுக்ஷுவானவர்க ளவசியம் விட்டுவிட வேண்டியது சித்தம்.

———:o:———

இனிக் கொள்ளத்தக்கவைகளான விச்சை முதன்மூன்று குணங்களையு நிரூபிக்கிறோம். அவையாவன:—

## 14. இச்சை.

பசிதாகநிமித்த மன்னபானாதிக் கிராகியமும், மலமூத்திர விசர்ச்சனமும் பண்ணவேண்டுமென்று வருகிற சித்தவிருத் திக் கிச்சையென்று பெயர். இவை பண்ணமற்போனாற் றுக்க மும் பண்ணினாற் சுகமுமாயிருக்கும். இதனாற் பந்தமோக்ஷஞ் சுவர்க்கநரகமில்லை யாதலாற் கொள்ளத்தக்கதாம்.

## 15. பக்தி.

இப்படியே மஹாதேவரிடத்திற் பிரியம் வருகிற சித்த விருத்திக்குப் பக்தி யென்று பெயர்.

## 16. சிரத்தை.

குரு வேதாந்தசாஸ்திரங்களின் மிகவும் விசுவாசம் வைத்த சித்தவிருத்திக்குச் சிரத்தை யென்று பெயர். இந்தப் பக்தி சிரத்தை முத்தியை யடைவிப்பதற் கேதுவாதலினுலும், பூருவத்திற் கட்டுவாங்கதனேன்கிற மஹாராஜன் இந்தச் சிரத்தாபக்தியினு லிரண்டு நாழிகையில் முத்தியை யடைந்தானென்று சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினுலும், முமுக்ஷுவானவர்க ளிந்தச் சிரத்தாபக்திகளை யவசியம் பண்ண வேண்டியது சித்தம். இராகாதி பதினறு குணங்களும் நிரூபிக்கப் பட்டன.

## இராகத் துவேஷப் பிரகரணம்

முற்றிற்று.

ஓம் தத்ஸத்

---

ஓம் தத் ஸத்

பரப்பிரஹ்மணேநம:

## இரண்டாவது

# சாதன சதுஷ்டயப் பிரகரணம்.

முற்பிரகரணத்திற் கற்பனுரூபமான விஷயசுகங்களைப் பிரியமாக விசுவசித்து அதிற் சுழலாநின்ற மனோவிருத்திக்கு அவைகள் துன்பமெனத் தெரிவித்து அவ்விருத்தியை விஷய சுகங்களினின்று நீக்கி, மேல்யதார்த்த சுகத்திற் பிரியம் வைக்கும்படி செய்து அதனுலுண்டான சிரத்தாபக்தியினுற் சித்த சுத்தியுண்டாக்கி, பின்பு அவ் யதார்த்தம் வெளிப்படுதற்கேதுவான சாதன சதுஷ்டயப் பிரகரணம் நிரூபிக்கிருர்.

(சுலோகம்.)

சதுஷ்டயம் ஸாதநாநாம் வேதாந்தே ஷு ப்ரதிஷ்டிதம்
தஸ்யஸ்வரூபம் க்ரமதஸ்தாவத் தத்ரநிரூப்யதே. (4)

(இதனது பொருள்.)

வேதாந்தத்தி ஞன்கு சாதனங்க ளதிகாரிகளுக்காகச் சொல்லியிருக்கின்றன. எந்தச் சாதனசதுஷ்டய சம்பத்தியிஞல் யாவரும் மோக்ஷமடைவார்களோ, அந்தச் சாதனசதுஷ்டய சம்பத்தியை நிரூபிக்கிரும்.

அவையாவன:— நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகா முத்திரார்த்த பலபோகவிராகம், சமாதிஷட்கசம்பத்தி, முமுக்ஷுத்துவமென நான்கு விதமாம். இவற்றில் நித்தியா

நித்தியவஸ்துவிவேகமென்பது பிரமமே நித்திய வஸ்து, சகத் தநித்திய வஸ்துவெனப் பகுத்தறிவதாம்.

இச்சக மநித்தியமென்ப தெப்படியென்றால், இவை பூத பௌதிகாத்மகமானபடியினா லநித்தியமேயாம். இங்ஙனம் பூத பௌதிகாத்மகமாகத் தோற்றப்படுகிற சகத்தில் முன்னே பௌதிகங்களுக் கநித்தியத்துவம் நிரூபிக்கின்றோம்.

அப்பௌதிகமாவ தியாதெனில் நால்வகைப் பிறப்பு எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்குலக்ஷம் யோனி பேதங்களாயுள்ள சரீரங்களாம்.

அவற்றில் நால்வகைப் பிறப்பென்பது:—சராயுஜம் அண்டஜம் சுவேதஜம் உத்பிஜ்ஜமென்பனவாம். இவற்றிற்பையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது சராயுஜமும், முட்டையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது அண்டஜமும், வியர்வையினிடமாகப் பிறப்பது சுவேதஜமும், பூமியினிடமாகப் பிறப்பது உத்பிஜ்ஜமுமாம்.

எழுவகைத் தோற்றமென்பது:—தேவரும் மானிடரும் மிருகமும் பக்ஷிகளும் ஊர்வனவும் நீர்வாழ்வனவுந் தாபரங்களுமாம்.

எண்பத்துநான்கு லக்ஷம் யோனிபேதமென்பது:—தேவபேதம் பதினாறு லக்ஷமும், மானிடபேத மொன்பது லக்ஷமும், மிருகபேதம் பத்துலக்ஷமும், பக்ஷிபேதம் பத்துலக்ஷமும், ஊர்வனபேதம் பதினொருலக்ஷமும், நீர்வாழ்வன பேதம் பத்துலக்ஷமும், தாபரபேதம் பதினெட்டு லக்ஷமுமாம்.

இவற்றில் தேவ, கந்தருவ, சித்த, சாத்திய, கின்னர, கிம்புருட, குய்யக, வித்தியாதர, யட்ச, இராக்ஷத, பூதப்பிரேத,

பிசாச,சாகினி, இடாகினி, வேதாள மாதியான தேவசரீரங்களும், மனு, மாந்தாதி, சக்கிரவர்த்தி, பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் முதலான நரசரீரங்களும், காமதேனு, சிம்ம, முதலான மிருக சரீரங்களும், அன்னம், கருடன் முதலான பக்ஷி சரீரங்களும், சேடன், எறும்பு, முதலிய ஊர்வனசரீரங்களும், மகரமச்சம், கூர்மம், முதலிய நீர்வாழ்வன சரீரங்களும், கற்பகவிருக்ஷம் பாரிஜாத முதலிய தாபர சரீரங்களுமாம்.

பூர்வத்தி லித்தேவர் முதலிய எண்பத்துநான்கு லக்ஷம் யோனிபேதமாயுள்ள சரீரங்களும் நசித்துப்போனதைச் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினாலும், இப்படியே சத்திய வர்த்தமான காலத்திலுமிருக்கின்ற மாதா பிதா முதலான சகல சரீரங்களும் நசிப்பது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப்போகிற சகல சரீரங்களும் இப்படியே நசிக்குமென்று தோற்றப்படுகிறபடியினாலு மித்தப் பௌதிகமான சகல சரீரங்களும் அநித்தியமென்பது சித்தம்.

இப்படியே பிருதிவியாதி பஞ்ச பூதங்களுக்கும் அநித்யத்துவம் நிரூபிக்கின்றோம்.

அஃதெப்படியென்றால், இப்பூதங்கள் பிறந்திருக்கிறபடியினாலும், அவயவிகளா யிருக்கிறபடியினாலும், பிரளயகாலத்தி னசித்துப்போகிற படியினாலும் அநித்தியமேயாம்.

அவைகளெப்படி நசிக்கிறதென்றால், பிரமப்பிரளயம் வருகிற காலத்தில், பன்னிரண்டு சூரியர்களு முதயமாய் நூறு வருஷ மழையில்லாமலெரித்துச் சகத்தெல்லாம் பஸ்பம்பண்ணி பூமியைத் தாங்கிக் கொண்டிருந்த ஆதிசேடனுடைய மகுடங்களைப் பஸ்பம் பண்ணுகிறபோது அந்த வாதிசேடனுடைய

முகங்களிலிருந்து காளகூட விஷாக்கினி பிறந்து அந்த விஷாக்கினியுஞ் சூரியாக்கினியுங்கூடி ஆதிசேடன்முதல் துவாத சாதித்தாளையும் பஸ்பம்பண்ணி, அப்படிப் பஸ்பம் பண்ணின அக்கினியினின்றுஞ் சத்தமகா மேகங்கள் பிறந்து நூறு வருஷம் யானைத்துதிக்கைபோல வருஷதாரைகள் வருஷிக்கும். அந்தவருஷ ஜலமே காரணமாக நிற்கும். அந்த ஜலத்திலப் பூமிபஸ்பம் விலயமாகும். அப்போதந்த ஜலம் வாயுஸ்தம்பமாக நிற்கும். அப்படி நிற்கின்ற ஜலத்தில் வடவானலம் பிறந்து ஏகார்ணவமான ஜலமெல்லாங் கிரகிக்கும். அவ்வடவாக்கினியும் பிரசண்டவாயுவி லீனமாகும். அந்த வாயுவு மாகாசத்தி லீனமாகும். அவ்வாகாசமு மஞ்ஞானத்தி லீனமாகும். அவ்வஞ்ஞானமும் பிரமத்தி லீனமாகும் அப்போதப் பிரமமொன்றுமே சேஷித்துநிற்கும். ஆனபடியினாற் பஞ்சபூத பௌதிகாத்மகமான சகத் தநித்தியமென்று சொன்னதும், இப்படி விசேஷித்து நின்ற பிரமத்துக்கு வேறே காரணமில்லாதபடியாற் பிரமமே நித்தியமென்று சொன்னதுஞ் சித்தம்.

இங்ஙனம் நித்தியா நித்திய வஸ்துக்களி னிச்சயந்தெரிதலாகிய முதற்சாதனங் கைவந்தாற் போதாதோ வென்றாற் போதாது. என் போதாதென்றால் சில வித்துவான்கள் சாஸ்திர பாண்டித்தியத்தினலாத்மா ஒன்றுமே நித்தியமென்றுஞ் சகத்தநித்தியமென்றுஞ் சொல்லிக்கொண்டு, ஸ்திரீ புத்திர தனதானியாதி போகங்களி லிச்சை வைத்துக் கொண்டிருக்கிறதினு லநித்தியமானது நித்தியமென்ற புத்தி வரும். ஆதலா லிரண்டாஞ்சாதனமான இகாமுத்திரார்த்த பலபோக விராகமுஞ் சம்பாதிக்கவேண்டும்.

இவ்விகா முத்திரார்த்த பலபோகவிராகமாவ தியாதென்றாலதையும் நிரூபிக்கின்றோம்.

அஃதாவது: இகலோக வைராக்கியமென்றும், பரலோக வைராக்கியமென்று மிரண்டு விதமாம்.

இவற்றி லிகலோக வைராக்கியமாவது:— சிற்குச் சந்தன வநிதாதி விஷயங்களில், வாந்தாசன மூத்திரபுரீஷங்களிலெப்படி யிச்சைவாராதோ, அப்படி யிச்சைவாராமற்போகிறது. இவ்வித வைராக்கிய மில்லாவிட்டா லிகத்திற்ருன் சம்பாதிக்கவேண்டுமென்கிற புத்திர, மித்திர களத்திர, பசு, பிரத்திய பலபந்து, கிரக, கிராம, க்ஷேத்திர, தனதானியாதிகள் முதலியவற்றைச் சம்பாதிக்க வேண்டுமென்ருல் மிகவும் பிரயாச அசாத்தியமாயிருக்கிறபடியினுலும், பிரயாசைப்பட்டெத்தனம்பண்ணினுல் அப்படி யெத்தனம் பண்ணின பதார்த்தங்களிற் சிறிது கூடிவருகிறதுஞ் சிறிது கூடிவாராமலும் போகிறபடியினுலும், அப்படிக் கூடிவாராத பதார்த்தத்தைப்பற்றி வெகு துக்க பரம்பரைகள் வருகிறபடியினுலும், அந்தத் துக்கத்தோடு கூடிக்கொண்டிருக்கிறவேளையிற் பெரியோர்களா யிருக்கப்பட்டபேர்கள்வந் தேதாகிலுஞ் சற்காரம்பண்ண வேண்டுமென்று கேட்பார்களாகில் அவர்கள்பேரில் யுக்தாயுக்தங்கள் தெரியாமற் கடினமாயிருக்கப்பட்ட சொல்லினுற் றிரஸ்காரம் பண்ணுகிருன். அவர்களை யப்படிச் சொல்கின்றபோது வீட்டில் தாயார் முதலான பேர் பிரிய வசனஞ்சொல்லிப் பெரியவர்களை யப்படிச் சொல்லலாமாவென்று கூறுவார்களாகில் அவர்கள் பேரி லாக்கிரகமாக விழுந்து யுக்தாயுக்தமில்லாத கடினமான சொல்லினு னிராகரிக்கிருனுனபடியினுலும், அப்படி நிராகரித்ததனு லநேக வனர்த்தங்களும், அநேக தோஷங்களும் வருகிறபடியினுலும், அப்பாவத்தினுல் நரகங்களில் விழுகிருனுனபடியினுலும், இப்படி யசாத்தியமான பதார்த்தங்களினுலித்தனை யனர்த்தங்கள் பிறக்குமானுல் சாத்தியமான பதார்த்தங்களினு லனர்த்தங்கள் வருகிறதற்குச் சொல்லவேண்டுமா?

அஃதெப்படியென்றால், சாத்தியமான வொருபெண்சாதியைப்பற்றிச் சோரபயங்களும், தாயார் தகப்பனார் விரோதங்களும், அண்ணன் தம்பி விரோதங்களும், அன்றித் தான் செய்யவேண்டுமென்கிற நல்ல காரியங்களும் விரோதமாய்த் தன்னை யெண்ணாமல் நடக்கிறபடியினாலும், துக்கமே தோற்றுகிறது. இப்படியே சாத்தியமா யிருக்கப்பட்ட தனத்தைக் குறித்துத் தாயாதிகள் பயமும், இராஜசோராக்கினி பயமும், இன்னுமிவைமுதலான மகாபய துக்கங்களுக் கேதுவாயிருக்கிறபடியினாலும், இப்படியே சாத்தியமானபுத்திரனைப் பற்றிச் சொன்ன பேச்சுக் கேளாமற் றிரிகிறானென்றும், புத்திசாலியாகாமற் போனானென்றும், சாரசோரனாகத் திரிகிறானென்றும், இவைமுதலான வநேக துக்கங்கள் வருகிறபடியினாலும், இப்படியே சாத்தியா சாத்தியமாயிருக்கப்பட்ட விப்பதார்த்தங்களினாற் றுக்கமே தோற்றுகிறதானபடியினாலும், இந்த விகலோக வைராக்கியமும் அவசியஞ் சம்பாதிக்கவேண்டியது சித்தம்.

பரலோக வைராக்கியமாவதேதென்றால்:—சுவர்க்கலோக முதற்சத்தியலோகம் வரைக்குமுள்ள சகலலோகபோகங்களும் வாந்தாசனமூத்திர புரீஷங்களி லெப்படி யிச்சையில்லையோ அப்படி யிச்சையற்றுப் போகிறதாம்.

இப்பரலோக வைராக்கியம் பண்ணாமற் போனாற் றோஷ மென்னவென்றால், இகத்தில் நகுஷமஹாராஜன் தேவேந்திர போகத்தின்பேரி லிச்சைப்பட்டுச் சோடசமகாதானங்களு மசுவமேதயாகங்களுஞ் செய்து சுவர்க்கத்துக்குப்போய்த் தேவேந்திர பட்டமுங் கட்டிக் கொண்டு இந்திராணியோடு போகிக்கவேண்டுமென்ற அதிக பரபரப்பினாற் பல்லக்கெடுக்கிற சப்தரிஷிகளில் அகத்தியரிஷியை யவமானம் பண்ணின

படியினு லவர் சபிக்க, அச்சாபத்தினு லவ்விந்திராணிபோக முதலான சகல போகங்களும் வியர்த்தமாய்த் தான் பண்ணின எக்கியதான பலன்களும் வியர்த்தமாய் மலைப்பாம்பாய் பூமியில் விழுந்துபோனபடியினாலும், இன்னுமநேகம் பேர் சுவர்க்காதிபோகங்கள் வேண்டுமென்ற வாசையினு லநேக எக்கியங்களு மநேக கருமங்களுஞ் செய்து அவைகள் வியர்த்தமா யநேக துக்கங்க ளநுபவிக்கிறார்க ளானபடியினாலும், அச்சுவர்க்கலோக முதற் சத்தியலோக பரியந்தமுள்ள லோகங்களிலிருக்கிற பிரமாதி சகல தேவதைகளுஞ் சகலரிஷிகளு மொருத்தருக் கொருத்த ரன்னியோன்னிய சாபத்தினாலு மொருத்தர் பெண்சாதியை யொருத்த ரபகரிக்கிறபடியினாலும், இராட்சதர்களிராஜ்ஜியங் கட்டிக்கொண்டு போவார்களென்கிற பயத்தினாலு மொருத்தர் ஐஸ்வரியத்தை யொருத்தர் அபகரிக்கிறபடியினாலு மிப்படியே வைகுண்டத்திலுங் கைலாசத்திலு மிருக்கிறபேர்கள்கூட அன்னியோன்னிய சாபங்களினாற் றுக்க ரூபமாயிருக்கிறபடியினாலு மவ்விடமடைதற்கு மிகவும் பிரயாச அசாத்தியமா யிருக்கிறபடியினாலும் அவசியமாய்ப் பரலோக வைராக்கியம் பண்ணவேண்டியது சித்தம்.

இப்படி யிகபர வைராக்கியங்களாற் சகல போகங்களையுஞ் சுகதுக்க கன்மங்களையும் விட்டு நிராசையா யிருக்கிறவிரண்டாஞ் சாதனங் கைவந்தாற் போதாதோ வென்னிற் போதாது. என் போதாதென்றால், சில பாஷண்டர்கள் காஷாயந்தரித்துச் சன்னியாசியென்று பேரிட்டுக் கொண்டு, சம்சாரத்தையும் மோக்ஷப் பிரதானமான கன்மங்களையும் விட்டுத் தன் சரீரசவுக்கியம் பண்ணும்பொருட்டுக் குட்சிபாதை தீரச் சில வித்தைகளைக் கற்றுக்கொண்டு தான் பெரியவனென்கிற பேரினலெனக்குச் சமானமாரென் றகங்கரித்துஞ் சபித்துந் திட்டியு மிதனால் வெகுதுக்க மடைந்தவனாக முன்னுள்ள

வில்லறமும் பின்னுள்ள துறவறமுமின்றி யுபயப்பிரஷ்டத் துவம் வருகிறபடியினால் மூன்றாஞ் சாதனமான சமாதிசட்க சம்பத்தியுஞ் சம்பாதிக்கவேண்டும்.

சமாதி சட்க சம்பத்தியாவ தியாதென்னி லதையும் நிரூபிக்கின்றோம்.

அவையாவன:— சமம், தமம், உபாதி, திதீட்சை, சமாதானம், சிரத்தையென ஆறுவிதமாம்.

1. இவற்றிற் சமமாவது:— மனோநிக்கிரகம் அஃதாவது மனதைச் சலியாம லகத்தி லடக்குவதாம்.

இந்த மனோநிக்கிரகஞ் செய்யாமற்போனாற் பூருவத்தி லபிமானித்திருந்த பதார்த்தங்கணசித்து மவைகளை வாசனையால் நினைத்துக்கொண்டே யிருக்கும். அதனாற் றுக்கமே யுண்டாகிறபடியினாலும், சத்தியவர்த்தமான காலத்திற்றான் சம்பாதித்த பதார்த்தங்களின் மிகுந்த மோகமா யவைகளை நினைத்துக்கொண்டே யிருக்கும். அப்போதப் பதார்த்தங்களுக்குச் சற்று விக்கினம் வந்ததாகி லதனால் மிகவுந் துக்கமே தோற்றுகிறபடியினாலும், இனி வரப்போகிற பதார்த்தங்களை வாசனையா னினைத்துக்கொண்டே யிருக்கும். அவை வாராமற் போனாற் றுக்கமே விளைகிறபடியினாலும், இத்துக்கங்கண் மனதி லடைத்திருக்கும்போது பெரியோர்களது வசனங்கள் பிடிபடாதபடியினாலும், இந்த மனோநிக்கிரக மவசியம் பண்ண வேண்டியது சித்தம்.

2. தமமாவது: பாகியேந்திரிய நிக்கிரகம். அஃதாவது சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகமும், வாக்காதி கன்மேந்திரிய பஞ்சகமுமாகிய விவ்விந்திரியங்களைச் செயம்பண்ணாமற்

போற லிப்பாகேந்திரியம் விஷயங்களிற்போய் விழும். அப்படியேபோய் விழுந்ததேயாகி லதனல் மகத்தான ஹானிவரும். அஃதெப்படியென்றால், சப்தவிஷயத்திறைல் மானுக்கெப்படி ஹானிவந்ததோ, பரிசவிஷயத்திறைல் யானைக்கெப்படி ஹானிவந்ததோ, ரூபவிஷயத்திறைல் விட்டிற்பூச்சிக் கெப்படி ஹானிவந்ததோ,, இரசவிஷயத்திறைல் மீனுக்கெப்படி ஹானிவந்ததோ, கந்தவிஷயத்திறைல் வண்டுக்கெப்படி ஹானிவந்ததோ, அப்படியே இந்தப் பாகியேந்திரியங்கள் விஷயங்களிற் சென்றால், மகத்தான ஹானிவருமானபடியின லிப்பாகியேந்திரியங்கள் விஷயங்களிற் போய் விழாமலவசியம் நிக்கிரகஞ் செய்யவேண்டியது. சித்தம்.

3. உபரதியாவது:— ஈஷணத்திரயத் தியாக பூருவகமான சர்வகர்ம சந்நியாசமாம்.

அக்கன்மாவது:— பாவகன்மமெனவும், புண்ணியகன்மமெனவு மிரண்டாம். இவற்றிற் பாவகன்மத்திறைல் நரகப் பிராப்தியுந் திரியக்காதி சரீரமும் வருகிறபடியின லிந்தப் பாவகன்ம மவசியஞ் சர்வாத்மன விட்டுவிடவேண்டியது சித்தம்

இப்படியே புண்ணிய கன்மங் காமியார்த்தமாகச் செய்வானேயாகிற் சுவர்க்கலோகப் பிராப்தியும் தேவத்துவமும் மேற்கீழ் போகிறதும் வருகிறதும் ஹானிவிருத்திகளும் இலாபாலாபங்களுஞ் ஜநநமரணங்களும் வருகிறபடியின லிந்தக் காமியார்த்தமான புண்ணிய கன்மங்களையுளையுஞ் சர்வாத்மன விட்டுவிட வேண்டியது சித்தம்.

இப்புண்ணியகன்மம் பகவத் பிரீதியாகப் பண்ணினனிட்காமமாம்.

இந்நிட்காம புண்ணியத்துவாரா சித்தசுத்திவரும் இச்சித்தசுத்தித்துவாரா சற்குருவிலாபங்கிடைக்கும், இச்சற்குரு

விலாபத்துவாரா சிரவண முண்டாம், இச்சிரவணத்துவாரா மனனமுண்டாம், இம்மனனத்துவாரா நிதித்தியாசன முண்டாம், இந்நிதித்தியாசனத்துவாரா சமாதிஞானமுண்டாம், இச்சமாதிஞானத்துவாரா மோக்ஷமடைவார்களாதலாற் புண்ணிய கன்மங்களை நிட்காமமா யவசியஞ் செய்யவேண்டியது சித்தம்.

ஈஷணாத்திரயத் தியாகமாவது:—தனத்தினிடத்தும் புத்திரனிடத்துந் தாரத்தினிடத்து மிருக்கின்ற விச்சையை நீக்குதலாம்

இவ்விதமானவுபாதியை யவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

4. திதீக்ஷையாவது:— சுகதுக்கங்கள்வரிற் பொறுத்திருத்தலாம். அஃதாவது தான் சம்பாதித்திருக்கிற புத்ர மித்ரகளத்ராதியான சகல பதார்த்தங்களும் செவ்விதாயிருந்தாற் சுகம். அப் பதார்த்தங்களுக்கோர் விக்கினம் வந்தாற் றுக்கம் இச்சுகதுக்கங்கள் இலாபாலாபங்கள், மாநாவமாநங்கள், செயாபசெயங்களாகிய இவை வந்தபோது சமமாய்ச் சகித்திருத்தலும், தன்னையொருவர் வாதிக்கிற்றான் தண்டிப்பதற் கதிகாரமிருந்தும தண்டியாமற் பொறுத்திருத்தலுமாம்.

இத்திதீக்ஷை பண்ணாமற்போனால் இத்தொந்தங்களிலகப் பட்டநேக வநர்த்தங்களும், அநேக பாபங்களும், அநேக சாஞ்சல்யங்களும், தேகசோஷணைகளும், பெரியோர்கள் சஹவாசத்துக்கு விக்கினங்களும், அவர்கள்சொல்லும் வசனங்கள் மனதிற்றரியாமற் போகிறது மிவை முதலான தோஷங்கள் அநேகமிருக்கிறபடியினால் இப்பொறுமை ரூபமாயிருக்கப் பட்ட திதீக்ஷையவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

5. சமாதானமாவது:—சடேந்திரியங்களையுஞ் சிரவணத்தி னிருத்தல். அஃதாவது: பெரியோர்களிடத்திற் கேட்குஞ் சிர வணம் பண்ணுகிற காலத்தில் மனது மிந்திரியங்களும் வாசனை வசத்திற் செல்லாமற் றிருப்பிச் சிரவணத்தின் பேரிலே ஜாக் கிரதையாக நிறுத்துதலாம். இதைப்பண்ணாமற் போனாற் பெரி யோர்கள் வசனிக்கும் வசனங்கள் மனதிற் பிடிபடாமல் விஷ யங்களிற் சென்றுகொண்டிருக்கும். அதனாற் பெரியோர்கள் சொன்னதிற் பயனில்லாமற் றானினைத்திருக்கிற காரியமுமா காமல் உபயப் பிரஷ்டத்துவம் வரும். அதனா லனேக துக்கப் பிராப்திகளுண்டாம் அதனால் மோட்சத்துக்கு விக்கினங்கள் வருகிறபடியினா லிந்தச் சமாதானம் அவசியம் பண்ண வேண் டியது சித்தம்.

6 சிரத்தையாவது:—பக்தி விசுவாசமென விரண்டாம். அவையாவன:—தாய்தந்தை முதலானவர்க ளிடத்திலிருக் கிற பிரியங்களெல்லாஞ் சற்குரு வேதாந்தவாக்கியங்களிடத்தி லேகாக்கிரமாகவைப்பது விசுவாசமும், ஈஸ்வரனிடத்தேகாக் கிரமாக வைப்பது பக்தியுமாம்.

இவற்றில் சற்குருவினிடத்தில் மிகவும் விசுவாசம் பண் ணவேண்டியது. ஏன் பண்ணவேண்டியதென்றால், அவர் மகிமை முன்னதாக நிரூபிக்கிறோம்.

அஃதாவது:—பிராந்திரகிதராயும், பரிபூரணராயும், ஞா னம் பக்தி வைராக்கிய சம்பன்னராயும், நிரந்தர சந்தோஷ த்தை யடைந்தவராயும், நித்திய திருப்தியடைந்தவராயும், சச்சிதானந்தப் பிரஹ்மஸ்வரூபராயும், தேசகால வஸ்து பரிச் சேத ரகிதராயும் சஜாதீய விஜாதீய, சுவகத பேதரகிதராயும், சட்பாவ விகாரரகிதராயும், சுத்த புத்த முக்த நித்திய பரமா

னந்த ஸ்வரூபராகியும், சர்வபரிபூரண கருணாசாகரராகியும், நிர்வியாச்சிய, நிர்லேப, நிர்ச்சங்க, நிர்வாண, நிட்காம, நிரூப, நிரந்தர, நிரவயவ, நிர்விசேஷானந்த, நிருபத்திரவ, நிர்பத்த, நிர்வேத்திய, நிர்க்குண, நிரஞ்சன, நிச்சல, நிட்பிரபஞ்ச ஸ்வரூபராயும், அச்சேத்திய, அக்கிலேத்திய, அசோஷிய, அதாகிய, அசல, அவாச்சிய, அநாமய, அக்ஷர, அப்பிரமேய, அசிந்திய, அந்நியபாகிய, அக்குரோத, அவிதர்க்கிய, அதிரிசிய, அநாசிரிய, அநாதார, ஆனந்த, அகண்டாகார ஸ்வரூபராகியும், விஸ்வ தைஜஸ பிராஞ்ஞைக் கதீதமான பிரத்தியக்சைதன்னியராயும், விராட்டிரண்ணியகர்ப்ப அவ்வியாகிருதங்களை யறிகின்ற சர்வசாக்ஷியாகியும், மூலப்பிரகிருதி அகண்டாகாரவிருத்தி ஆனந்த விருத்தி யதீதராயும், கிருத கிருத்தியராயும் விளங்குவதோடு ஸ்வரூபஞானமில்லாத மூடர் மலமூத்திர பாத்திரமாயிருக்கப்பட்ட தேகமே நானென்றிந்தச் சரீரத்தைக் குறித்து வந்த ஹானிவிருத்திகளும், ஜாதி, வர்ணம், குலம், கோத்திரம், ஆசிரமம், நாமம், வேஷமாதிகளும், சநநமரணங்களும் நானென்றுகொண்டிருக்கிறவர்களாயும், சங்கற்ப விகற்பமாயிருக்கிற மனதை நானென்று கொண்டிருக்கிறவர்களாயும், உசுவாசநிசுவாசமாயிருக்கிற பிராணவாயுவை நானென்றுகொண்டிருக்கிறவர்களாயும், ஆபாசமாயிருக்கிற சீவனை நானென்றுகொண்டிருக்கிறவர்களாயும், சசவிஷாணம்போலிருக்கிற சூனியமேநானென்றுகொண்டிருக்கிறவர்களாயும் இவை முதலான அநேக மதஸ்தர்களும், திருசியங்களாய், பரிச்சின்னங்களாய்ச் சாவயவங்களாய், அநிர்தசடதுக்க ரூபங்களாயுள்ள அஞ்ஞான முதலான தேகேந்திரிய பிராண புத்தியே நானென்றுகொண்டிருக்கிறவர்களாய், லோக காமியா யிருக்கப்பட்ட சீவனே நானென்றுகொண்டு கிஞ்சிஞ்ஞர்களாயு மிருக்கிறபேர்கள் கூட நிரேதுகமாய்ச் சற்குருவினுடைய வீக்ஷணத்துக்குப் பாத்திர